# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,673 — 1959 පෙබරවාරි 23 වැනි සඳුදා — 23.2.1959

11,673 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 23 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உப பிரிவினுல் கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னுல் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 20 ந் திகதி

டீ. பீ. ஆர். குணவர்த்தன,
விவசாய உணவு அமைச்சர்.

அட்டவணை

| கட்டளையிட்ட திகதி | யாரால் கட்டளை இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 27.1.59 | விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) | உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு) | 27. 1. 59 ந் திகதியைக் கொண்ட 11,653 ம் இலக்கம் |
| 28.1.59 | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஆட்டிறைச்சி | 28. 1. 59 ந் திகதியைக் கொண்ட 11,654 ம் இலக்கம் |

---

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. ரி/1/59.

உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்
### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் உப-விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உப-விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), அன்ரன் றெத்வெல் மெக்கெய்ஸர் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ந் திகதியைக்கொண்ட 11,529 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட ரி/13/58 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளையை மாசிக்கருவாட்டைப் பொறுத்தமட்டில் அம் மாசிக்கருவாட்டிற்கென விதிக்கப்பட்ட மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலைகளையும், சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலைகளையும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனுேடிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்கு கூடுதலாக 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் தலைப்பில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது ;

(3) முதலாம் அட்டவணையின் 3 ம் பத்தியின் கீழ் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் என விதிக்கப்பட்ட விலைகளை 2 ம் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிப்பிட்ட தொகைகளினுல் அதிகரித்து அவ்விலைகளை 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட பொருளின் ஒரு நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலையாக 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 1 ந் திகதியிலிருந்து நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் காட்டப்பட்ட பொருளின் நிகர இருத்தல் ஒன்றை 2 ம் அட்டவணையின் முதலாம் பத்தியில் காட்டப்பட்ட இடங்களில் அதிகரிக்கப்பட்டிருக்கும் விலைகளுக்குக் கூடுதலாக விற்றலாகாது ;

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) எத்தொகையான மாசிக்கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக்கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக்கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமை போல் கணக்குப் பார்க்கப்படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடங்களிலும் மாசிக்கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மாசிக்கருவாட்டை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ் வாகனத்தில் மாசிக்கருவாட்டுக்கு இக்கட்டளையால் அவ்விடப்பரப்பில் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடங்களில் மாசிக்கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக்கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(9) இக்கட்டளையால் மாசிக்கருவாடு விற்குமிடத்து இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாசிக் கருவாட்டைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 17 ந் திகதி திருகோணமலைக் கச்சேரியில் பிற்பகல் 3 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

அன்ரன் ஆர். மெக்கெய்ஸர்,
உப-விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
திருகோணமலை மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>திருகோணமலைப் பட்டணமும், குடாக்கரைக் காரியாதிகாரியின் பிரிவில் ஒரு நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>திருகோணமலை நகரசபை வட்டாரத்தில் ஒரு நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>கொட்டியார் பற்றும், தம்பலகாமப் பற்றும் கட்டுக்குளப்பற்றுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் ஒரு நிகர அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| மாசிக்கருவாடு (எல்லா இரகங்களும்) .. | 243 0 .. | 2 43 .. | 244 40 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>கிராம விதானையின் பகுதிகள் | பத்தி 2<br>முதலாம் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்ட பொருட்களின் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் விதிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிகரித்த தொகை |
|---|---|
| உப்புவெளி, சாம்பற்றீவு .. | அதிகரிப்பு இல்லை<br>சதம் |
| சின்னவாடி, வெள்ளமணல், தம்பலகாமம், நிலாவெளி .. | 01 |
| சின்னக்கின்னியா, பெரியகின்னியா, குறிஞ்சாக்கேணி, உப்பார், கந்தளாய், மூதூர், அக்கரைச்சேனை, சம்பூர், மல்லிகைத்தீவு, கிளிவெட்டி, தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு, கும்புறுப்பிட்டி .. | 02 |
| கூனித்தீவு, ஈச்சிலாம்பத்தை, குச்சவெளி, பனிக்கெட்டியாவ, கோமரங்கடவெல .. | 03 |
| திரியாய், மதவாச்சியா, கல்கடவெல .. | 04 |
| புல்மோட்டை .. | 05 |
| தென்னமரவடி, பரணமதவாச்சியா .. | 06 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது